முருகப்பெருமான் துணை

**மகான் ஜனகர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.11.2022,** புதன்கிழமை

1. தருமசக்தி மிக்க நல்லுலகை
தவபலம் கொண்டு அமைக்க
ஆறுமுகனார் அவதாரமாக வந்த
அண்ணலே அரங்கமகா ஞானியே
2. ஞானியே உன் பெருமை கூறி
ஞாலமதில் சுபகிருது தேள் திங்கள்
இனிமைபட சப்தமதிகதி புந்திவாரம்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 07 ம் நாள் 23.11.2022, புதன்கிழமை)
இயம்பிடுவேன் ஜனகர் யானும்
3. யானும் அனுகூல ஆசிதனை
உலகநலம் காண உரைப்பேன்
ஞான வாழ்வு மக்கள் அடைய
ஞானிகளை அவசியம் வணங்க வேண்டுமென
4. வேண்டுமென ஞானிகள் பூசையை
விழாவாக முழுமதி காலம் தோறும்
தொண்டுடன் மக்களிடை விதைத்து
தொடர் தருமம் வளர்க்கும் அரங்கன்
5. அரங்கன் உண்மை வழிகளை
அடைந்து உள் வாங்கினாலே
வரங்களாக உலகமக்களிடை
வந்தடையும் ஞான வாழ்வு
6. வாழ்வினில் தொடரும் தருமம்
வருகின்ற இடர்களை போக்கி
ஊழ்வழி இன்னலும் நீக்கி
உயர்வான ஞானவான்களாக மாற்றி
7. மாற்றியே உலகை பாதுகாக்கும்
மகத்துவம் கொண்டவர்களாக
ஆற்றல் கூட்டி ஞானிகள் பூசை
அனைத்தும் இணைந்து அருள்புரியும்
8. அருள்பட அரங்கன் உபதேசம்
அனைத்தும் வேதமாக மாறி
பொருள்பட அன்பர்கள் அனைவரையும்
புண்ணியவானாக மாற்றி காக்கும்
9. காக்கவே இந்த கலியுகம் தன்னில்
கந்தவேலன் சக்தி தரும்
ஆக்கமான ஞான வழிகள் தனை
அனைவரும் ஏற்று வருகவே

10. வருகவே நிலைமைகள் யாவும்
வல்லமைபட மாறி ஞானயுகம்
ஆறுமுகன் தலைமை கொண்ட
ஆற்றல்மிக்க அற்புதம் நிகழும்

11. நிகழவே ஞான ஆட்சிதானும்
நிலவுலகம் சடுதி கண்டு
வகைபட அரங்கனால் மாற்றம்
வையகம் கண்டு தேறும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–